**ந.க.எண்: அ1 / 001 / 2009**

பேரூராட்சி அலுவலகம்
ஸ்ரீமுஷ்ணம்
நாள் : 24.06.2009

# கடலூர் மாவட்டம்

# ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியின் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி

1. ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சிபகுதியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலைகளை செய்து முடிப்பதற்கான மூடி முத்திரையிடபபட்ட ஒப்பந்தபுள்ளிகளை இப் பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரரிடம் இருந்து பேரூராட்சி செயல் அலுவலர் (அ) அவரது அதிகாரம் பெற்றவரால் 03.07.2009 தேதி வெள்ளி கிழமை மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளிகளை ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மீது எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

3. அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி வேலைக்குரிய டேவணித்தொகையினை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி இரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பபட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி அட்டவணை அடிப்படையில் கோரப்படுகிறது. எனவே, ஒப்பதப்புள்ளி நமூனாக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் 02.07.2009 தேதி வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணிவரை வழங்கப்படும். அதற்கான தொகை ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே கண்டுள்ள தொகையினை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5. காலம் தவறி வரும் ஒப்பந்தப;புள்ளி மற்றும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப;புள்ளிகள் ஒப்பந்த வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிப்படும்.

6. மூடி முத்திரையிடப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

7. பணி வரம்பு உள்ளவர்கள் மட்டும் டேவணித் தொகையை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

8. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 03.07.2009 தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும்.

9. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பந்ததாரர்கள் இலாக்கா சம்மந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு வேலையினை செய்து முடிப்பதற்கான ரூ 20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுத்து மூலமாக ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும்.

10. ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலையினை ஒப்பந்ததாரரே செய்து முடிக்க வேண்டும். கீழ் குத்தகைக்கு விடக்கூடாது.

11. .ஒப்பந்ததாரர் செயல் அலுவலர் குறிப்பிடும் இடத்தில் இருந்து இலாக்கா மூலம் வழங்கப்படும் வேலைக்கான பொருட்கள் இருப்பின் பெற்றுக் கொள்ள வேண்டும்.

12. இலாக்கா மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு ஒப்பந்த நமூனாவில் குறிப்பிட்டுள்ள உரிய தொகை பிடித்தம் செய்யப்படும்.

13. வேலையினை அதன் எதிரே குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும்.தவறினால் வைப்புத் தொகையினை பறிமுதல் செய்யப்படுவதுடன் அறிவிப்பு ஏதுமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பானார்.

14. ஒப்பந்ததாரர் வேலைக்கான உத்திரவு கிடைத்தவுடன் 3 நாட்களுக்குள் வேலையை ஆரம்பிக்கப்பட வேண்டும்.தவறினால் ஒப்பந்தாரர் பதிவு ரத்து செய்யப்படும்.

15. வேலையினை அதன் எதிரே குறிப்பிட்டுள்ள காலகெடுவிற்குள் செய்து முடிக்க வேண்டும்.தவறினால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் வேலை செய்து முடிக்க தவறும் பட்சத்தில் மதிப்பீட்டுத் தொகையில் 3 சதவீகிதம் அபராதம் விதிக்கப்படுவதுடன் நாள் 1– க்கு ரூ 500/- அபராதம் விதித்தும் இத்தொகையினை தங்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் எனவும், அதற்கான சகல நஷ்டங்களும் ஒப்பந்ததாரரே பொறுப்பாக்கி தொகையினை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

16. பணியினை அட்டவணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படாவிடில் கீழ்கண்ட விபரப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்: 2852/08/A4 நாள்: 20.06.2009 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

    1. காலக்கெடு முடிந்து முதல் 15 தினங்கள஁ வரை 1 சதவீகிதம் ஒப்பந்த விகிதப்படி பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

    2. 15 முதல் 30 தினங்கள் வரை 1 சதவீகிதம் - 2 சதவீகிதம் - 3 சதவீகிதம் ஒப்பந்த விகிதப்படி பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

    3. 30 முதல் 45 வரை 3 சதவீகிதம் - 2 சதவீகிதம் - 5 சதவீகிதம் ஒப்பந்த விகிதப்படி பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

    4. காலக்கெடு முடிந்து 45 நாட்கள் ஆகிவிட்ட நிலையில் தங்களின் ஒப்பந்த டேவணித் தொகை பறிமுதல் செய்வதுடன் ஒப்பந்தப்பதிவு ரத்து செய்யப்படும்.

## <u>பிற்படுத்தப்பட்ட பகுதிக்கான மான்ய நிதித் திட்டம் 2007–2008</u>

| வ எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) | டெண்டர் நமூனா கட்டணம் | டேவணித் தொகை | வேலை செய்துமுடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | சப்தரிஷித் தெருவில் கட்டண கழிவறை மற்றும் குளியல் அறை அமைத்தல். | 4.20 | 1720 | 10500 | 90 நாட்கள் |
| 2. | சப்தரிஷித் தெருவில் தார் சாலை அமைத்தல். 500மீ | 2.70 | 1690 | 6750 | 45 நாட்கள் |
| 3. | புதுக்குப்பம் தார் சாலை அமைத்தல். 210மீ | 2.17 | 1690 | 5425 | 45 நாட்கள் |
| 4. | நரிக்குறவர் காலணியில் தெரு மின் விளக்குகள் அபிவிருத்தி செய்தல். | 0.30 | 300 | 750 | 30 நாட்கள் |
| 5. | வடக்கு ஆதி திராவிடர் காலணியில் தார் சாலை அமைத்தல். 95மீ | 1.90 | 600 | 4750 | 45 நாட்கள் |
| **மொத்தம்** | | **11.27** | | | |

**செயல் அலுவலர்**
**பேரூராட்சி அலுவலகம்**
**ஸ்ரீமுஷ்ணம்**

<u>பெறுநர்:</u> இப்பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்கள்.

<u>நகல்கள்:</u>

திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் – 1 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது

’’ பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

’’ உதவி செயற்பொறியாளர் பேரூராட்சிகள் உதவி இயக்குனரகம் கடலூர் அவர்களுக்கு தகவலறிய அனுப்பி வைக்கப்படுகிறது.

’’ இளநிலை பொறியாளர், பேரூராட்சி அலுவலகம், அண்ணாமலை நகர், தகவலறிய அனுப்பப்படுகிறது.

’’ தலைவர்,துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பேரூராட்சி மன்றம், ஸ்ரீமுஷ்ணம் தகவலறிய அனுப்பப்படுகிறது.

’’ ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட அரசு அலுவலகங்களில் விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.

’’ பேரூராட்சி அலுவலக விளம்பர பலகை. ஸ்ரீமுஷ்ணம்